
தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16


ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 8 **2008 பிப்ரவரி** கனி 3




## கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கிறோம்...

# In Christ We Have...



ஒரு வாழ்வு அது ஒருபோதும் மரிக்காதது;
ஒரு அன்பு அது ஆழம் அறியமுடியாதது;
ஒரு மகிமை அது ஒருபோதும் மந்தாரமடையாதது;
ஒரு அழகு அது ஒருபோதும் பழுதடையாதது;
ஒரு ஒளி அது ஒருபோதும் இருளடையாதது;
ஒரு பரிசுத்தம் அது ஒருபோதும் அசுத்தமடையாதது;
ஒரு மகிழ்ச்சி அது ஒருபோதும் குறையாதது;
ஒரு சமாதானம் அது ஒருபோதும் புரிந்து கொள்ளக்கூடாதது;
ஒரு நம்பிக்கை அது ஒருபோதும் ஏமாற்றமடையாதது;
ஒரு வலிமை அது ஒருபோதும் பலவீனமடையாதது;
ஒரு சந்தோஷம் நிறைந்தது அது ஒருபோதும் தடையில்லாதது;
ஒரு நேர்மை அது ஒருபோதும் களங்கமில்லாதது;
திரவ சம்பத்துக்கள் அது ஒருபோதும் செலவழியாதது




‘ஒரே வழி’ வேதபாடம்

The Master Course படிக்க விரும்புகிறவர்கள்

இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 15-ஐ

அனுப்பி,

ஒரு வருடத்தில் பயின்று Certificate

பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College**

**Post Box 5, Batlagundu-624 202 S.INDIA**



"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 8 பிப்ரவரி - 2008 கனி - 3


ஆசிரியருரை

# பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்

## *Resist The Devil*



**யா**க்கோபு சொல்லுகிறார் "தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" (யாக்.4:7). பொதுவர்க பிசாசு என்றாலே எல்லோருக்கும் பயம். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கும் போது பிசாசுக்குப் பயப்படவேண்டியதில்லை. எப்படியென்றால் "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" என்று 1யோவா.5:4-ல் வாசிக்கிறோம். நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து பாவத்திற்கு செத்து நீதிக்குப்பிறந்தவர்களாயிருந்தீர்கள் என்றால் பிசாசையும் அவன் கொண்டுவரும் அனைத்தையும் நீங்கள் ஜெயிக்கமுடியும். நான் பலவருடங்களாக கிறிஸ்தவனாக, கிஸ்தவளாக வாழ்ந்துவருகிறேன் இன்னும் நான் பிசாசையும் அவன் கொண்டுவரும் உபத்திரவத்தையும் மேற்கொள்ளமுடியவில்லையே என்பீர்களாகில் உங்களுடைய விசுவாசத்தை சீர்தூக்கிப்பார்க்கவேண்டும் அல்லது மறுபரிசீலனை செய்யவேண்டும். ஏனெனில் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். விசுவாசமில்லாதிருந்துகொண்டு பிசாசை ஜெயிப்பது கூடாத காரியம்.

பாவம் ஒரு மனிதனுடைய வாழ்வில் பல வழிகளில் வருகிறது. யூதாசை எடுத்துக்கொள்வோமானால் அவன் பிசாசுக்கு இடம் கொடுத்தான். எப்படியென்றால், அவனுக்குள்ளாக இச்சையிருந்தது.ஒரு முறை "மரியாள் இயேசுவுக்கு விலையேறப்பெற்ற கலங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு ராத்தல் கொண்டுவந்து இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய

பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது. அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்கப்போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து: இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான். அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச்சொன்னான்" என்று வேதம் நமக்குப்போதிக்கிறது (யோவா.12:3-6). இவனுக்குள்ளாக பணஆசை இருந்தபடியால் அதை பிசாசு எடுத்துக்கொண்டு அவனுக்குள் புகுந்தான். மேலும், இயேசுவைக் காட்டிக்கொடுக்கும்படியாக "பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர் கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்" என்று லூக்.22:3-ல் தெளிவாக வாசிக்கிறோம். உங்களுக்கு பாவக்காரியங்களில் ஈடுபடும் பழக்கம் கடுகளவுயிருந்தால் போதும், பிசாசு அதன்வழியாக உங்களுக்குள் புகுந்துவிடுவான். பின்பு பாவம் உங்களை ஆண்டுகொள்ளும். அந்தப்படியாக பிசாசு யூதாசை ஆண்டுகொண்டது அவனுடைய முடிவை யாவரும் அறிவர். அவன் நான்றுகொண்டு செத்தான். "பாவம் செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" என வாசிக்கிறோம் (1யோவா.3:8).

ஆனால், "தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்" என திருமறை அப்படிப்பட்டவனைக் குறித்து சாட்சியிடுகிறது (1யோவா.3:9). எப்படியெனில் ஒருவனுக்குள் தேவனுடைய வசனமாகிய வித்து தரித்திருக்கும்போது அவன் பாவம் செய்யான். அது அவனை எச்சரிக்கிறது, பாவத்திற்கு தப்புவிக்கிறது, அவனைச்சுற்றி வேலியடைக்கிறது. தாவீது என் நாவிற்கு காவல் வையும் ஆண்டவரே என்கிறான். அப்படியென்றால் அவரே அதற்கு காவல்வைக்கமுடியும். கர்த்தர் காவாவிட்டால் காவலாளிகளின் கண்விழிப்பு விருதா! என காண்கிறோம். "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது" என வேதம் போதிக்கிறது (ரோம.6:14). ஒருவன் கிருபையுள்ள வசனத்தை ஏற்று அதற்கு கீழ்ப்படியும்போது அப்படிப்பட்டவனை அந்தக்கிருபை காக்கிறது. அவன் பாவம் செய்யமாட்டான். பொல்லாங்கன் அப்படிப்பட்டவனை தொடான். தேவனாகிய கர்த்தர் அப்படிப்பட்டவனைக் காக்கிறார். "மரித்தவன்

பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே" (ரோம.6:7). அவன் நீதிக்கு அடிமையாகியிருப்பதால் பாவம் அவனை மேற்கொள்ளாது. நாம் முன்னே பாவத்துக்கு அடிமையாயிருந்த காலத்தில் அதற்கு அடிமைகளாயிருந்தோம். இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்களே என பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார்.

மேலும், யாக்கோபு சொல்லுகிறார்: பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். இன்றைக்கு அநேகர் எதிர்த்துநிற்க முடியாமல் சோதனை காலத்தில் பின்வாங்கிப் போகின்றனர். நம்முடைய ஆண்டவராகிய இயேசுவையும் பிசாசு சோதித்தான். "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான்" (மத்.4:9-11). இவ்விதமாக நாமும் வசனத்தை வைத்துக்கொண்டு பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்போமானால் அவனை ஜெயிப்போம்.

பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு சொல்வதைக் கவனியுங்கள்: "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள், ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின்பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகலவிதமான

வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்" (எபே.6:11-18). நாம் பிசாசின் தந்திரங்களோடு போராடி ஜெயிக்க ஒரு யுத்த புருஷன் எவைகளை தன்னுடைய சரீரத்தில் தரித்திருப்பானோ, அதைப்போல சத்தியத்தையும், நீதியென்னும் மார்க்கவசத்தையும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையையும், விசுவாசமென்னும் கேடகத்தையும், இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொண்டு, எல்லாவற்றிற்கும் மேலாக ஜெபம்பண்ணி விழித்துக்கொண்டிருங்கள் என்ற ஆலோசனைகளை பவுல் எடுத்துச்சொல்லுகிறார். அவைகளை நாம் மிகவும் கருத்துடன் கவனித்து, வேதாகமம் சொல்லுகிறதான இவ்விதமான ஆயுதங்களைத் எப்பொழுதும் தரித்தவர்களாயிருக்க வேண்டும். இவைகளின்படி நடப்பது மிகவும் கடினம் என்று சொல்லி பதிலுக்கு பதில் செய்ய முயற்சிப்பதும், வருவது வரட்டும் என்று சொல்லி பிசாசினுடைய கிரியைகளின்படி செய்யும்போது பிசாசு உங்களை ஆட்கொள்ளுவான். "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்" (எபே.4:26,27). நீங்கள் உங்களுடைய சுயபோதனைக்கு கீழ்ப்படிவீர்கள் என்றால் பிசாசுக்கு இடம்கொடுக்கிறீர்கள் என்று அர்த்தம். அந்தபோதனையின் வழியாக உங்களுக்குள் வருவான். நாம் எல்லாம் தெரிந்தவர்கள் அல்ல கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்பார்கள். தேவனையும் அவருடைய வசனங்களையும் அறிந்து அவருக்கும் அவருடைய வார்த்தைக்கும் உங்களை அற்பணியுங்கள்.


அநேகர் பிசாசுக்கு எப்படி இடம் கொடுக்கிறார்கள் என்றால், தங்களில் இருக்கிற இச்சையை விட்டுவிடாமலிருப்பது. வேதாகமம் எச்சரிக்கின்ற காரியங்களில் நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் "உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" என எச்சரிக்கிறார் பேதுரு (1பேது.5:8). யாருடைய கண்களுக்கு தப்பினாலும் பிசாசினுடைய கண்களுக்கு தப்புவது என்பது மிக கடினம். அவன் இறைக்காக அலைந்துதிரியும் ஒரு சிங்கத்தைப்போல சுற்றிவருகிறான். எப்படி சிங்கம் பதுங்கியிருந்து இறையை வேட்டையாடுகிறதோ அதைப்போல அவன் பெலவீனமான ஆத்துமாக்களை வேட்டையாட சுற்றி சுற்றி வருவான். ஆகையால் தான் வசனம் இப்படியாக சொல்லுகிறது. நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுத

வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள் என்று. தன்னிடத்தில் பட்டயம் இருக்கும்போது ஒரு யுத்தவீரனுக்கு பயம் இல்லாமற்போய்விடுகிறது. அதைப்போல தேவனுடைய சர்வாயுதமாகிய வசனம் இருக்கும்போது அப்படிப்பட்டவனுக்கு பயமில்லை. அவனை பிசாசு மேற்கொள்ள முடியாது. ஏனெனில் அவனிடம் வல்லமையுடைய கர்த்தரின் வசனம் இருக்கிறது. அதை அவன் தரித்தவனாயிருக்கிறான். நாம் தேவைப்படும்போது வசனத்தை எடுக்கிறவர்களாக இருக்கக்கூடாது அதை நம்முடைய சரீரத்தில் தரித்தவர்களாயிருக்கவேண்டும். வேஷம்போடுகிறவர்கள் தான் அவ்வப்போது நிகழ்ச்சிக்கேற்ப வேஷம்போடுவார்கள் நாம் அப்படியிருக்கக்கூடாது. கர்த்தராகிய இயேசுவின் அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன் என்று பவுல் சொல்வதைப்போல நாமும் எப்பொழுதும் இயேசுவையும் அவருடைய வல்லமையுள்ள வசனத்தையும் தரித்தவர்களாயிருக்கவேண்டும். அப்பொழுது பிசாசையும் அவன் கொண்டுவருகிற பொல்லாப்புகளையும் மேற்கொள்ள முடியும்.

**பிசாசுக்கு எதிர்த்து நிற்க மற்றொரு வழி:** என்னவென்றால். "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்" என்கிறார் பவுல் (1தெச.5:22). பொதுவாக உலகமும் வேண்டும் ஆண்டவரும் வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால், ஒரு கிறிஸ்தவன் உலகத்திற்கு ஒத்தவேஷம் தரிக்க முடியாது. வேதம் அதற்கு இடமளிப்பதில்லை. வானத்தையும் சகலத்தையும் படைத்த தேவன் ஒரு நாளும் துன்மார்க்கனுக்கு உதவமாட்டார். அவர் சத்தியபரர். ஒருநாளும் பொய்யுரையாதவர். பிசாசு பொய்யனும் பொய்க்கு பிதாவுமா யிருக்கிறான். இங்கு பொய்க்கும் மெய்க்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தீர்களா! தேவன் எப்படியிருக்கிறாரோ அப்படியே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவனும் இருக்கிறான். "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" (1பேது1:16). ஆகையால் பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை என்று காண்கிறோம். நீங்கள் எப்படிப்பட்ட தேவனுடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்? நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதத்தை எப்பொழுதும் தரித்துக்கொள்ளுங்கள். ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே அவருடைய திருசித்தம். ஆனால் பிசாசு கொல்லவும் அழிக்கவுமே வருகிறான். அவனை எதிர்க்கவும், அவனுக்கு தப்புவிக்கப்படவும் கர்த்தருக்கு செவிகொடுங்கள். அப்பொழுது தேவன் உங்களோடு இருப்பார்! பிசாசு கொண்டுவருகிறதான அனைத்து விதமான தந்திரங்களிலிருந்தும் கர்த்தர் உங்களைக் காக்கும்படியாக நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# கள்ளப் போதனைகளை சமாளிப்பது
# Dealing With False Teaching

*J.C.Choate*




குறிப்பாக பிரசங்கியாரும் அதே சமயத்தில் சபையிலுள்ள மற்ற நடத்துனர்களும், எல்லா விசுவாசிகளும் தங்கள் வாழ்க்கையில் சில கள்ளப்போதனைகளை எதிர்கொண்டு சமாளிக்க நேரிடும். நான் பிரசங்கியாரை குறிப்பிட்டுச் சொன்னதன் காரணம் என்ன வென்றால் அவர் தொடர்ந்து பிரசங்கிக்கின்றார், பல சமயங்களில் தான் வசிக்கும் பகுதிகளிலும் பொதுவான இடங்களிலும் சென்று போதிக்க வேண்டியிருப்பதால் அவர் எல்லாவிதமான போதனைகளையும் எதிர்கொள்ள நேரிடுகிறதோடு பலவிதமான உபதேசங்களைக் குறித்தும் வினவப்படுகிறார். இந்த விதமானசூழ்நிலைகளில் அவர் என்ன செய்வார்? பொருட்படுத்தாமல் விட்டுவிடலாம், ஒத்துப்போகலாம் அல்லது பதில் அளிக்கலாம்.

முதலாவது நாம் கள்ள போதனை என்றால் என்னவென்று விளக்க வேண்டும். எந்த ஒரு போதனையும் வேதத்தின் போதனையோடு முரண்படுமானால் அதுவே கள்ளபோதனை. அது விசாலமான எல்லைகளை உள்ளடக்கியது. இயற்கையாகவே பல வித்தியாசப்பட்ட மதங்கள் இருப்பதனால் அப்படியாகும். ஆனால் ஒரு சராசரி பிரசங்கியார் கிறிஸ்தவ எல்லைக்குட்பட்டு அதிகமாக கள்ளப் போதனைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். ஏனென்றால் பொதுவாக அவர் கிறிஸ்துவை விசுவாசிக்கிற மக்கள் மத்தியிலே அதிக நேரம் இருக்க வேண்டியிருக்கும். ஆகவே அவர்களுடைய போதனைகளும் வேதத்தின் அடிப்படையிலே இருப்பதால் கிறிஸ்தவ சமுதாயம் என்று அழைக்கப் படுகிறவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல போதனைகளிலிருந்து அவருடைய போதனைகள் மாறுபட்டிருக்கும். அப்படி மாறுபட்ட போதனைகளை நம்புகிறவர்களும் பல கேள்விகளைக் கேட்பார்கள். இவையெல்லாவற்றிற்கும் சொல்ல வேண்டியது என்ன வென்றால் கர்த்தருக்கு ஒரு சபை உண்டு. ஒரே சபை அவராலே ஸ்தாபிக்கப்பட்டது, அதற்காகவே அவர் மரித்தார், அவரே அதன் தலைவர், இரட்சகர், கிறிஸ்துவே அதன் அஸ்திபாரம், அந்த சபை கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்து கொண்டாதாயிருக்கிறது (மத் 16:18; அப் 20:28; கொலே 1:18; எபே

*5:23; 1கொரி. 3:11; ரோமர் 16:16). கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவால் அவருடைய சபையில் சேர்க்கப்படுகிறார்களென்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றன (மாற் 16-16; அப் 2:38,47).*

*இப்போது அந்த ஒரே சபையோடு கூட அநேக வேறு சபைகளும் இருக்கின்றன. அவைகளெல்லாம் மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டு மனிதர்களுடைய பெயர்களைத் தாங்கி மனிதர்களுடைய போதனையின் படியே நடத்தப்படுகின்றன. மேலும் அநேக காரியங்கள் தவறான போதனை அடிப்படையிலேயே இருக்கிறது. இந்த சபைகள் இரட்சிக்கப்படுவதற்கு அநேக வழிகள் உண்டென்று போதிக்கின்றன. நீங்கள் நினைக்கின்ற எல்லாவற்றைப் பற்றியும் அங்கே போதிக்கப்படுகின்றன. பொதுவாக மக்கள் இவைகளை குறித்து எப்படி தெரிந்துவைத்திருக்க முடியும். இந்தத் தவறான போதனைகளைக்குறித்து அவைகள் தேவனுடைய வார்தைகளோடு ஒப்பிடப்பட்டு சத்தியம் தவறானவைகளுக்கு மேலானது என்பதை போதித்தாலொழிய, இந்த கள்ள போதனைகளுக்காக எந்த நேரமும் செலவிடவேண்டியுள்ளது என்ற உண்மை வருந்தத்தக்கது. ஆனாலும் அதிலிருந்து தப்ப வழியில்லை. நீங்கள் தப்பித்துக் கொள்ளாவிட்டால் மக்கள் தொடர்ந்து பொய்யானவர்களை நம்பிக்கொண்டிருப்பார்கள். எப்படியிருப்பினும் அநேகர் தொடர்ந்து நம்புவார்கள். ஆனாலும் சத்தியம் போதிக்கப்பட்டு பொய்யான போதனையைக் கண்டனம் பண்ணும் போது உண்மையைத் தேடுவோர் இரட்சிக்கப்படுவார்கள்.*

*ஆகவே பிரசங்கியார் வேதாகமத்தினுடைய எல்லாப் போதனைகளையும் கற்று நன்கு அறிந்துகொள்ளும்படி படிக்க வேண்டும். குறிப்பாக அவர் சுவிசேஷத்தைக்குறித்தும் சபையைக் குறித்தும் தொழுகையைக் குறித்தும் இரட்சிப்புக்கேற்ற எல்லாவிதமான அடிப்படைபோதனைகள் குறித்தும் நன்கு அறிந்தவராக இருக்க வேண்டும். அப்போது மதசம்பந்தப்பட்ட பிரிவினை உள்ளவர்கள் போதிக்கின்ற பொய்யானபோதனைகளுக்கு வேதத்தின் அடிப்படையிலே பதிலளிக்க முடியும் அவருக்கு சத்தியத்திலே முழு நம்பிக்கையிருக்க வேண்டும். கள்ளபோதனைகளை எதிர்த்து சமாளிக்கின்ற சக்தி இருக்க வேண்டும். மேலும் மக்கள் சத்தியம் எது, தவறு எது, என்பதை குறித்து எந்த விதமான சந்தேகங்களை எழுப்பினாலும் அதற்குத் தெளிவான பதிலளிக்க வேண்டும்.*

*கிறிஸ்துவும் அப்போஸ்தலரும் கூட கள்ள போதனைகளை சமாளிக்க வேண்டியிருந்தது. தங்களை கிறிஸ்து என்று சொல்லிக் கொண்டவர்கள் கூட இருந்தார்கள். கர்த்தர் எச்சரித்தார். "அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று*

எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக்கிறிஸ்துகளும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" (மத் 24:23-24). பவுல் எழுதுகிறார், "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்" (ரோமர் 16:17-18). கொரிந்துவிலுள்ள சபையை பவுல் பின்வருமாறு வேண்டிக் கொள்கிறார்."சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" (1 கொரிந் 1:10). பவுல் கொலோசெயருக்கு சொல்லும்போது ."நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து; தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே" என்கிறார்(கொலே 2:20-22).

யோவான் பின்வருமாறு சொல்கின்றார்." பிரியமானவர்களே உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1 யோவான் 4:1). கிறிஸ்துதாமே சொல்லுவதைக் கேளுங்கள், "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்" (மத்.15:9). மேலும் அவர் சொன்னது. " பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர்என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான்

ஒருக்காலும் உங்களைஅறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" என்றார் (மத் 7:21-23).

ஆகவே கர்த்தரும் அப்போஸ்தலரும் பொய்யான போதனைகளுக்கு எதிராக நம்மை எச்சரிக்கின்றார்கள். ஏனென்றால் சத்தியத்திற்கு பதிலாக கள்ளபோதனைகளை ஏற்றுக்கொள்கிறவர்கள் தங்களை இழந்து விடுகிறார்கள் ஆகவே நாம் ஜெபத்தோடு கூட அப்படிப்பட்ட மக்களை தவறுகளுக்கு எதிராக எச்சரித்து, அவர்கள் அதை நிராகரித்து தேவனுடைய வார்த்தைகளை நம்பி இரட்சிக்கும்படியாக அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

இதற்கான பதில், கள்ள போதனைகளை வெறுத்து மக்களை அதைக்குறித்த அறிவும் அந்த ஆபத்துகளை குறித்த எச்சரிப்பும் இல்லாதபடி விலக்கிவைப்பதல்ல. அதே சமயத்தில் உண்மையையும் பொய்யையும் கலந்து அதோடு ஒத்துப்போவதும் யாருக்கும் எந்த வகையிலும் பயன் தராது. பொய்யோடு கலக்கப்படுகின்ற சத்தியம் சத்தியமாகாது. அது யாரையும் இரட்சிக்க முடியாது.

கள்ள போதனைகளை சமாளிக்கையில் எப்பொழுதுமே அதைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பதென பொருள்படுகிறதில்லை. அந்த தவறுகளை நாம் கையாளும் போது அந்த தவறில் இருப்பவர்களை மிக அசிங்கமான முறையிலோ அல்லது அவர்களை துணிந்து அழித்து விடவேண்டுமென்றோ, செயல்படுவது அல்ல. அவர்களை நாம்நேசித்து அவர்கள் இரட்சிக்கப்படும்படியாக தவறுக்களை உணர்த்த வேண்டும். நாம் நினைப்பதே சரி என்ற கொள்கையில் உறுதியாயிருந்து தவறான போதனையிலிருப்பவர்கள், சொல்வதை கவனிக்கவே மாட்டேன் என்று பிடிவாதமாக இருக்ககூடாது. யாரையும் வேண்டாம் என்று தள்ளிவிடாதீர்கள். அதே சமயம் தேவனுடைய சத்தியத்தோடு அவர்கள் இரட்சிக்கப்பட என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்யுங்கள். ஆனால் சத்தியம் மட்டுமே ஒருவரை இரட்சிக்கவோ விடுதலை செய்யவோ முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# முன்னானது மூன்று

| | | | |
|---|---|---|---|
| மேன்மைக்கு | மு | தாழ்மை | – நீதி.15:33 |
| அழிவுக்கு | ன் / னா | அகந்தை | – நீதி.16:18 |
| விழுதலுக்கு | ன / து | மனமேட்டிமை | – நீதி.16:18 |

பெண்கள் பகுதி

# தேவன் ஏன் எனக்கு இதைச் செய்தார்?

## Why Did GOD Do This To Me?

*-Betty Burton Choate*



சென்று போன மாதங்களிலும், தேவன் என்னைக் காப்பாற்றி வந்த நாட்களிலும் எனக்கு உண்டாயிருந்த சீர் இப்பொழுது இருந்தால் நலமாயிருக்கும். அப்பொழுது அவர் தீபம் என் தலையின் மேல் பிரகாசித்தது; அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்துபோனேன். தேவனுடைய இரகசியச் செயல் என் கூடாரத்தின் மேல் இருந்தது. அப்பொழுது சர்வ வல்லவர் என்னோடிருந்தார்; என் பிள்ளைகள் என்னைச் சூழ்ந்திருந்தார்கள். என் பாதங்களை நான் நெய்யினால் கழுவினேன்; கன்மலைகளிலிருந்து எனக்காக எண்ணெய் நதிபோல் ஓடி வந்தது; அந்தச் செல்வ நாட்களின் சீர் இப்போதிருந்தால் நலமாயிருக்கும் *(யோபு29:2-6)*.

ஆகையால் இப்போது என் ஆத்துமா என்னில் முறிந்து போயிற்று; உபத்திரவத்தின் நாட்கள் என்னைப் பிடித்துக்கொண்டது. இராக்காலத்திலே என் எலும்புகள் துளைக்கப்பட்டு, என் நரம்புகளுக்கு இளைப்பாறுதல் இல்லாதிருக்கிறது.

உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீர் எனக்கு மறு உத்தரவு கொடாதிருக்கிறீர்;.... என்மேல் கொடூரமுள்ளவராக மாறினீர்; உம்முடைய கரத்தின் வல்லமையால் என்னை விரோதிக்கிறீர்.... நன்மைக்குக் காத்திருந்த எனக்குத் தீமை வந்தது; வெளிச்சத்தை வரப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு இருள் வந்தது. என் இருதயம் குழம்பிற்று அமராதிருக்கிறது. உபத்திரவநாட்கள் என்மேல் வந்தது. வெயில் படாதிருந்தும், நான் கறுகறுத்துத் திரிகிறேன்; நான் சபையில் எழுந்திருந்து உதவிக்காக அலறுகிறேன் *(யோபு30:16,17; 20,21;26-28)*.

“மாறுபாடானவனுக்கு ஆபத்தும், அக்கிரமச் செய்கைக்காரருக்கு ஆக்கினையுமல்லவோ கிடைக்கும். அவர் என் வழிகளைப் பார்த்து, என் நடைகளையெல்லாம் எண்ணுகிறார் அல்லவோ? *(யோபு31:3,4)*.

“என்னைப் பகைக்கிறவனுடைய கோபம் என்னைப் பீறுகிறது, என்பேரில் பற்கடிக்கிறான்; என் சத்துரு கொடிய கண்ணினால் என்னைப் பார்க்கிறான்.... நான் சுகமாய் வாழ்ந்திருந்தேன்; அவர் (தேவன்) என்னை நருக்கி, என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கி என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார். அவருடைய வில்லாளர் என்னைச் சூழ்ந்து

கொண்டார்கள்; என் ஈரலைத் தப்பவிடாமல் பிளந்தார்; என் பிச்சைத் தரையில் ஊற்றிவிட்டார். நொறுக்குதலின் மேல் நொறுக்குதலை என் மேல் வரப்பண்ணினார் (யோபு16:9,12-14).

"என்னுடைய கண்கள் தேவனிடத்தில் அழுகிறது. ஆ; ஒரு மனுபுத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறது போல, தேவனோடே மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும்!

"குறுகின வருஷங்களுக்கு முடிவு வருகிறது; நான் திரும்பி வராதவழியே போவேன். என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக் குழி எனக்கு ஆயத்தமாயிருக்கிறது" (யோபு16:21,22;17:1).

ஆத்ம வேதனையில் மனித சுபாவமுள்ளவர்கள் அடிக்கடி எதிர்பாரத சம்பவத்துக்குள்ளாகும்போது யோபு பல ஆண்டுகளுக்கு முன் பல வார்த்தைகளினால் கதறினது போல் கதறுகின்றனர். "தேவன் எங்கே" "ஏன் அவர் இதை எனக்குச் செய்தார்?" "நான் தீயவன் அல்ல இது எனக்கு ஏற்றதா!" "ஏன் தேவன் எனக்கு செவிகொடுத்து என் வேதனையை போக்குகிறதில்லை?"

"நான் என்னால் தாங்கக் கூடாத துக்கத்தினால் நொறுக்கப்பட்டிருக்கிறேன். என் இருதயத்தில் இனி ஒருபோதும் சமாதானம் இருக்காதா?"

யோபுவைப் போல, நாம் அமைதியின் தேவனை குற்றப்படுத்தலாம். ஆனால் இந்தக் குற்றச்சாட்டு தவறாக உண்டாக்கப் பட்டிருக்கிறது. தேவனிடமிருந்து உண்மையான சமாதானமும் ஆறுதலும் கிடைக்கிறது. மேலும் நமது வருத்தம் அல்லது நாசத்தில் நமக்கு உதவும்படி நமது நடவடிக்கைகளுக்கு வழியை ஏற்படுத்துகிறது. அவருடைய வேதாகம வார்த்தைகளின் மூலம், அவர் நம்மோடு பேசுகிறார். அவருடைய அன்பை அவர் தெரியப்படுத்துகிறார். நன்மையான நேரங்களிலும் தீமையான நேரங்களிலும் அவரிடத்திற்கு வரும்படி நம்மை அவர் அழைக்கிறார்.

தேவன் இவ்வுலகை ஆறாவது நாள் உண்டாக்கி முடித்தபோது, உலகத்திற்கு வேத வசனங்கள் என்ன கூறுகிறது என்பதை நினைத்துப் பார்ப்பீர்களா? "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; (ஆதி.1:31). தேவன் உண்டாக்கிய இவ்வுலகத்தில் நாசத்தை தீங்கை வருத்தத்தை மரணத்தை சேர்த்து உண்டாக்கவில்லை. இது நேர்த்தியாகவும், அழகாகவும் இருந்தது - "தேவன் இருப்பாரானால்" நாம் நினைக்கிற காரியம் நிச்சயமாக இருக்கும்.

விரோதியானவன் இருக்கிறான், முதலாவதாக அவன் தேவனுடைய விரோதியாக இரண்டாவதாக சிருஷ்டிப்பின் விரோதியாக

இருந்தபோதிலும் அவர் அதிகமாக நேசிக்கிறபடியால் அவர் அவருடைய ஒரேபேரான குமாரனை நமக்காக மரிப்பதற்கு அனுமதித்தார். அந்த விரோதியானவன் பிசாசு. உலகத்திற்குள் பாவத்தைக் கொண்டு வந்தவன் அவனே. மேலும் பாவமானது சிருஷ்டிப்பின் சகலவற்றையும் உருக்குலைக்கவும் அழிக்கவும் தக்கதான குழப்பத்திற்குள்ளாக்கி யிருக்கிறது. "அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளும்..... அந்தச் சிருஷ்டியானது கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப் படுகிறது" *(ரோம.8:20-22)*.

யோபு அவனுடைய அனைத்து வேதனைக்கும் காரணம் யார் என்று அறிந்து கொள்ளாமல் அவன் தேவன் இதற்குக் காரணம் என தவறாக நினைத்தான். ஆனால் வேதாகமம் ஆதிமுதற் கொண்டே இதற்கான காரணம் சாத்தான், அவனே யோபுவை தாக்கிக் கொண்டிருந்தவன், தொடந்து அவனை அழிக்கும்படிக்கு, புயலையும், எதிர்பாராத அழிவையும் கொண்டுவரும்படி இயற்கையை பயன்படுத்திக் கொண்டிருந்தவன் சாத்தான் எனக்கூறுகிறது.

நம் உலகத்தில் பல இயற்கை அழிவுகள் இன்று நேரிடுகிறது. ஒரு குறிப்பிட்ட அழிவிற்கு காரணம் சாத்தான் அல்லது பாவத்தின் மூலம் உலகத்தில் நுழைந்துள்ள இயற்கை விதிகளின் விளைவு என நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ நாம் எல்லா பிரச்சனைகளையும் அவனிடமே சாட்டிவிடுவோம். அவன் தேவனுடைய எதிரியாகவும் மனிதனின் எதிரியாகவும் அவனுடைய எண்ணம் நம்மை அழிப்பதற்காகவே இருக்கிறது.

"ஆனால்," நீங்கள் கேட்கலாம், "தேவன் எல்லா வல்லமையையும் உடையவராயிருந்தால், ஏன் அவர் சாத்தானை உலகத்திற்குள் இப்படிப்பட்ட கொடூரமான காரியங்களைக் கொண்டுவரும்படிக்கு அனுமதிக்கிறார்? ஏனென்றால் மனிதன் பாவத்தை தெரிந்தெடுத்த போதும், தொடர்ந்து பாவத்தை தெரிந்தெடுக்கிற போதும், சாத்தானை "இவ்வுலகத்தின் அதிபதியாக" உருவாக்குகிறான். "நீதிவாசமாயிருக்கும் புதிய வானங்களுக்கும் புதிய பூமிக்கும் வழியை ஏற்படுத்தும்படிக்கு இயேசுவந்தார். ஒவ்வொன்றும் மறுபடியும் மிக நல்லவையாக இருக்கப்போகின்ற அந்த உலகத்தில் இது இருக்கும். மேலும் நாம் அவரை பின்பற்ற ஆயத்தமாயிருக்கின்றோ மென்றால் அந்த உலகத்திற்கு வழியை காண்பிக்கும்படியே இயேசு வந்தார்.

"அப்படியென்றால் தேவன் இந்த உலகில் உண்மையான

வல்லமையற்றவராகயிருக்கிறார் என்று பொருள்படுகிறதா? அல்லது இங்கும் இப்போதும் நமக்கு என்ன நடக்கிறது என்பது பற்றி அவர் கவனிக்காதவராயிருக்கிறாரா? இல்லை, நிச்சயமாக இல்லை! ஆனால் தேவன் இயற்கை விபத்துகளை உலகில் இயங்கி வருகிற இயற்கை விதிகளை ஆச்சரியமான விதத்தில் மாற்றி போடபோவதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது. சூழ்நிலைகள் சரியாக இருக்கின்றபோது சுழல் காற்று வரும்: சூழ்நிலைகள் சரியாக இருக்கின்றபோது கடும் புயல் காற்று வரும்; ஆம் சூழ்நிலைகள் சரியாக இருக்கின்றபோது ஆபத்தும் மரணமும் வரும்.

மற்ற துயரச்சம்பவங்கள் பாவத்தின் மூலம் மிக நேரடியாக ஏற்படுகின்றன. குழந்தைகள் தங்கள் பள்ளித் தோழர்களை கொலைசெய்யும் போதும், ஒரு இன மக்கள் மற்றொரு இனமக்களை கொலை செய்யும் போதும், குடியும் போதையும் நாசத்தையும் மரணத்தையும் கொண்டு வரும் போதும் கொடூரமான தாக்குதல் மனிதவர்க்கத்தின் மேல் பேரழிவை ஏற்படுத்துகிறது இந்த பாவத்தின் விளைவினால் இவ்வகையான அனைத்து கரியங்களும் ஏற்பட்டு நிலைகுலைய பண்ணிவிட்டது.

மனிதன் உலகத்தில் உருவாக்கி வைத்திருக்கிற குழப்பத்தை தேவன் மாற்றியமைக்க முடியாது, அவருடைய பிள்ளைகளை சபிக்கப்பட்டுள்ள பாவ உலகத்திலிருந்து அவர் நமக்காக ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கின்ற அந்த நிலையான வீட்டிக்கு கொண்டு செல்ல மட்டுமே அவர் வாக்குப்பண்ணக்கூடும்.

அதுவரை நாம் இங்கே தங்கியிருக்கவேண்டும். சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக அவர் நடத்துவார் (ரோம.8:28) என அவர் தம்மிடத்தில் அன்பு கூருகிற தம்முடைய பிள்ளைகளுக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார். யோபுவுக்கு தேவன் எல்லாவற்றையும் செய்திருக்கிறார் என சாத்தான் கூறுவதுபோல நாம் பாதுகாப்பின் வேலிக்குள்ளாக அடைக்கப்பட்டிருக்கிறோம் என அது அர்த்தமாகுமா? இல்லை, நாம் இந்த தீமையான உலகத்தின் ஒரு பாகமாக இருக்கிறோம். மேலும் துயரத்தையும், நேசிக்கப்பட்டவர்களின் அகால மரணத்தையும், வாழ்க்கை புயல்களையும், இயற்கை அழிவுகளையும் துக்கத்தையும் தொடர்ச்சியான மன வேதனையையும் நாம் மிக நன்றாகவே தாங்கக் கூடும்.

ஆனால் தேவன் அவருடைய ஆவியினால் நம்முடைய உள்ளான ஆவியில் நம்மை வல்லமையாய் பலப்படுத்துவது போல் நம்மை தாங்குவார் (எபே.3:16). நாம் நமது துன்பத்தின் நடுவே அவரிடத்தில் கொண்டுள்ள விசுவாசத்தில் நிலைத்திருந்தால், அவர் சாத்தானின் தீய வலிமை மிக்க ஆயுதங்களையும், அழிவையும் நமது வாழ்வினுள் நன்மையாக மாற்றுவார். "நான் உன்னைவிட்டு

விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று எபி.13:5-ல் அவர் வாக்குப்பண்ணியிருக்கிறார்.

தேவன் தம்மை "பரம பிதா" வாக வெளிப்படுத்துகிறார். நீங்கள் ஒரு பெற்றோராக இருந்து உங்களுடைய பிள்ளைகள் அழிவை அனுபவித்துக்கொண்டிருந்தால், நீங்கள் எங்கேயிருப்பீர்கள்? அவர்கள் உங்கள் பிள்ளையாய் இருக்கின்றபடியினால் அவர்களுடைய வேதனையைக் குறித்து மனவருத்தமும் ஒரு பெற்றோருக்குரிய அதிகமான துன்பத்தையும் உணர்வீர்கள் என்பதை அறிவீர்கள்; அவர்களை அவர்களுடைய துன்பத்திலிருந்து காப்பாற்றும்படிக்கு உங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்வீர்கள் என்பதை அறிவீர்கள்; நீங்கள் எப்போதும் அவர்களிடமே இருந்து, உங்களால் முடிந்த அளவு உதவி எந்த வழியிலும் ஆதரவுடனிருக்க தயாராக இருப்பீர்கள். உங்களுடைய பிள்ளை துன்பத்தில் இருந்தால், நீங்கள் எவ்வளவு உடைந்து போயிருப்பீர்கள் அவனுடைய பிரச்சனைகளுக்காக உங்களை குற்றப்படுத்தினாலும அந்த பிரச்சனைகளை உங்களுக்கும் அவனுக்கும் இடையே வர அனுமதித்தாலும், அந்த நேரமே அவனுக்கு உதவும்படி அவனோடிருக்க அதிக விருப்பம் கொண்டிருப்பீர்கள்.

இவ்வழிகளிலெல்லாம் தேவன், நமது ஆவிக்குரிய தகப்பனாக நம்மோடிக்கிறார். நம்முடைய வாழ்வில் எது வந்தாலும் கவலையில்லை கிறிஸ்தவ தியாகி, ஸ்தேவானுடைய சம்பவத்தில், தேவனுடைய வலது பாரிசத்தில் அவன் பார்த்த ஒருவரை அவன் எவ்விதமாக வர்ணிக்கிறார் என்பதை உங்களால் நினைவுகூரமுடிகிறதா? அடுத்த ஒவ்வொரு வர்ணனையில், இயேசு உட்கார்ந்து கொண்ருடிப்பது போல சித்தரிக்கப் படுகிறார். ஆனால் ஸ்தேவான் கல்லெறியப்பட்டுக் கொண்டிருந்தபோது அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் நின்று கொண்டிருக்கிறதை அவன் பார்த்தான். ஸ்தேவானுடைய பாடுகளின் பங்கானது அவரை அவருடைய பாதத்தினிடத்திற்கு கொண்டு வந்ததுபோல் இருந்தது. அந்த உயிர்ப்புள்ள வர்த்தைச் சித்திரம் தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு, நாம் துன்பப்படும் போதெல்லாம் ஒரு அற்புதமான ஆறுதலளிக்கும் ஒன்றாகும்.


"அவர் எவ்வாறு உதவி செய்கிறார்?" சில அற்புதச் செயலின் மூலம் அல்ல, அவர் நடத்துகிற அற்புதங்கள் புதிய உடன்படிக்கையை அல்லது ஒரு புதிய தூதரை கொடுக்கும்படி எல்லைக்குட்பட்டதா யிருக்கிறது; ஆனால் அவருடைய மிகப்பெரிய நடத்துதல் காலங் களினூடே அவருடைய கிருபையின் நடத்துதலாயிருக்கிறது; மக்களையும்; அரசுகளையும், சூழ்நிலைகளையும், சம்பவங்களையும் அவர் கையாளும் விதம் அவருடைய பிள்ளைகளுக்கு சரீரப்பிர காரமாகவும் சிறப்பாக ஆவிக்குரிய பிரகாரமாகவும் நன்மையான காரியங்களை கொண்டுவரும்படிக்கே நடந்தேறியிருக்கிறது.

ஆகவே துன்ப நேரங்களில், அவர் அவருடைய மற்ற பிள்ளைகளின் இருதயங்களையும், கரங்களையும், உடமைகளையும் பயன்படுத்துகிறார். அவருடைய சபை, இவ்வுலகில் அவருடைய குடும்பம் - பிள்ளைகளுக்கு ஆறுதலையும், சரீர உதவியையும் கொடுக்கும்படிக்கும் மேலும் வேதனையை அனுபவிக்கின்ற உலகத்தின் மக்களுக்கும் கூட அவ்வாறு செய்கிறார். அவர் அரசுகளையும், மருத்துவர்களையும், மருந்துகளையும், தச்சர்களையும், ஆலோசகர் களையும் ஆறுதலிலும், இயற்கை தோற்றத்திலும் சிறிது சிறிதாக இந்த மக்களும், இந்த பொருட்களும் புதிய நம்பிக்கையை நம்பிக்கையிழந்த இருதயங்களுக்கு கொண்டு வரும்படிக்கு பயன்படுத்துகிறார். மக்கள் மறுபடியும் மகிழ்ச்சியடையவும், தங்கள் வாழ்வில் ஏற்பட்டிருக்கிற நன்மைக்காக நன்றி உணர்வடைவதற்கும் கற்றுக் கொள்கிறார்கள். யோபு அனுபவித்த நம்பிக்கையற்ற நிலையை அவர் கூறியபோது, "என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக்குழி எனக்கு ஆயத்தமா யிருக்கிறது" என்றான். தேவன் சாத்தானின் தீங்கை மாற்றி, அதற்கு பதிலாக யோபுடைய வாழ்வை ஆசீர்வதிப்பதற்கு திரும்பியபோது அதை சமாதானத்தோடு அவன் அனுபவித்தான்.

தேவன், அவரை அல்லது சாத்தானை தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை மனிதனுக்கு அனுமதித்திருக்கிறார். எனவே எல்லா உபத்திரவங்களினூடே அவர் மேல் விசுவாசமுள்ளவர்களா யிருக்கும்படிக்கு அவரால் நம்மை தெரிந்தெடுக்க முடியாது மேலும் நம்மை நற்காரியங்கள் செய்யும்படிக்கும் அவரால் மாற்ற முடியாது ஆனால் எப்பொழுதும் போல் நமது கரத்தை அவர் கரத்தில் வைக்கிறோம், அவர் ரோமர்8:28-ல் வாக்குப் பண்ணியிருக்கிறதை நினைத்து நம்முடைய வாழ்வின் துக்கங்கள் நன்மையாக மாற்றப் பட்டிருக்கிறது என்பதையும் நாம் அறிகிறோம். அதுவே வாக்குத்தத்தம். அவர் அதை நிறைவேற்ற தவறமாட்டார்.

# தேசிய சின்னம்

## *(National Emblem)*



நமது தேசிய சின்னம் சாரநாத்திலுள்ள அசோகர் தூணின் மேல் பகுதியில் காணப்படும் அசோக சின்னமாகும். இதில் நான்கு சிங்கங்கள் நான்கு திசைகளை பார்த்தபடி உள்ளன. இதன் அடிப்பாகத்தில் ஒரு எருதுவும், குதிரையும் இந்த இரண்டிற்கும் நடுவில் அசோகச் சக்கரமும் உள்ளன. அதன் கீழ் சத்யமேவே ஜயதே (வாய்மையே வெல்லும்) என்று பொறிக்கப் பட்டுள்ளது. "சத்யமேவ ஜயதே' என்ற வாக்கியம் உபடதத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. நமது தேசியச் சின்னம் 1950 ஜனவரித் திங்கள் 26-ம் நாள் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

பெண்கள் பகுதி

# ஊழியருக்கேற்ற மனைவி

## A Proper Wife for A Minister

*J.Glory Arjunan*



அன்பான சகோதரிகளே, உங்களது கணவன் கிறிஸ்துவை அறிவிக்கும் ஒரு ஊழியரா? அப்படியென்றால் கிறிஸ்துவை அறிவிக்கும் நற்பணியில் உங்கள் கணவரோடு கூட உங்களுடைய பங்கு என்ன? உங்களுடைய கவணவருக்கு ஏற்ற மனைவியாக செயல்படுகின்றீர்களா? உங்கள் கணவரோடு கூட சபையைக் கட்டும்பணியில் உங்களுடைய முயற்சி, மற்றும் ஈடுபாடு எவ்விதம் உள்ளது? சற்றுசிந்தியுங்கள்.

அன்று இயேசுகிறிஸ்து சுவிசேஷத்தை அறிவிக்கும் பணிக்கு சீஷர்களை அனுப்பியபோது இரண்டு இரண்டு பேராக அனுப்பினார். தேவன் மனுஷனை உண்டாக்கியபோது மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, அவனுக்கு ஏற்ற துணையை உண்டாக்குவேன் எனக்கூறி ஏவாளை ஏற்றதுணையாக உண்டாக்கினார். இன்றும் அவருடைய பணியைச் செய்ய, அவருடைய சபையைக் கட்ட, வேதவசனங்களைப் பகிர்ந்து கொள்ள கணவனோடு கூட சேர்ந்து, ஊழியருக்கு ஏற்ற மனைவியாக செயல்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அவ்விதமாக செயல்பட்ட அருமையான தம்பதியர்கள் வேதத்தில் அநேகருண்டு.

அதில் ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் என்ற தம்பதியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் எவ்விதமான ஊழியத்தை செய்தார்கள் எனப்பார்க்கும்போது "அவன் (அப்பொல்லோ) ஜெப ஆலயத்தில் தைரியமாய்ப் பேசத் தொடங்கினபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்" (அப்.18:26). அன்பான சகோதரிகளே, இந்த பிரிஸ்கில்லாள் எத்தனை ஆர்வமாக தான் கண்டுகொண்ட தேவனுடைய மார்க்கத்தை தன் கணவனோடு கூட அதிக திட்டமாய் விவரித்து காண்பித்து ஊழியனுக்கு ஏற்ற மனைவியாக வாழ்ந்திருக்கிறாள்! இன்றைய நாளில் ஊழியரின் மனைவியாக இருக்கிற நீங்கள் இவ்விதமாக உங்கள் கணவரோடுகூட ஊழியத்திற்குச் சென்று

தேவனுடைய மார்க்த்தை விவரித்துக் காண்பிக்கிறீர்களா? அல்லது சாக்கு போக்குச் சொல்லிக் கொண்டு உங்களுடைய பிள்ளைகள், உங்களுடைய குடும்பம் மட்டுமே பெரிதென நினைத்து தேவனுடைய மார்க்கத்தை அறியாத பல கோடி மக்களைக் குறித்த கரிசனை இல்லாமலிருக்கிறீர்களா? நாமும் நம் குடும்பமும் மட்டும் இரட்சிக்கப்பட நினைப்பது தன்னலம். வேத வசனம் கூறுகிறது, "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (பிலி.2:4) என்று. ஆனபடியினால் அழிந்து போகின்ற ஆத்துமாக்களை அக்கறையுடன் நோக்குவோமா?

இவர்களைப்போலவே சகரியா, எலிசபெத் என்ற இன்னொரு தம்பதியரும் உண்டு. "அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்" என லூக்.1:6-ல் வாசிக்கிறோம். இவர்கள் தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாய் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியும் நடந்து தேவனை மகிமைப்படுத்தியிருக்கிறார்கள். அன்பான சகோதரிகளே, நமது வாழ்வில் அவருடைய கட்டளைகளின் படி நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாக காணப்பட வேண்டும். இவ்விஷயத்தில் தேவனுக்கு முன்பாக பொய்சொன்ன அனனியா சப்பிராளை நன்கு அறிவீர்கள். அவர்களுடைய கதி என்னவாயிற்று ஒரே நாளில் இருவரும் மரித்தார்கள். இவைகள் எல்லாம் நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டுள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் வார்த்தையை கவனியுங்கள். "சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" (1கொரி.9:16). இது நற்செய்தியை அறிவிக்கவேண்டிய காலம். நற்செய்தி அறிவிக்காவிட்டால் குற்றம் நம்மேல் சுமரும். ஊழியத்திற்கு தடையாய் இல்லாதபடி கர்த்தருடைய சபை கட்டப்பட புத்தியுள்ளவர்களாக மேற்கண்ட பிரிஸ்கில்லாள், எலிசபெத் போன்றோரைப் போல கர்த்தருடைய ஊழியத்தை செய்துவரும் உங்கள் கணவருக்கு ஏற்ற மனைவியாக செயல்பட துவங்குங்கள். கர்த்தர் தாமே உங்களுக்கு உதவி செய்வாராக!

**ஜெபியுங்கள்**



- ☆ சென்ற மாதம் நடைபெற்ற 29–வது வாசகர் கருத்தரங்கில் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்ற 50 நபருக்காக...
- ☆ தமிழன், இமயம், மற்றும் ஸ்ரீ டிவியில் வெளிவரும் நிகழ்ச்சிகளுக்காகவும் மற்றும் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளுக்காகவும்...
- ☆ நமது இதழின் வாசகி சகோதரி. லலிதா பிரேமகுமாரி அவர்கள் 18.12.07–ல் கிறிஸ்துவுக்குள் மரித்து விட்டார்கள் அவர்கள் குடும்பத்திற்காக ...



J.C. Choate 1932 - 2008

## "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது" சங்.116:15

## "Precious in the sight of the Lord is the death of his saints" Ps.116:15

உலகம் முழுவதிலும் பல வருடங்களாக தேவப் பணியை செய்து வந்த சகோதர் ஜே.சி.சோட் அவர்கள் பிரசித்தி பெற்ற ஓர் மிஷனரியாவார். இவர் பிப்ரவரி 1-ம் தேதி பிற்பகல் 12.20 மணியளவில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். குறிப்பாக இந்தியாவில் இவருடைய சுவிசேஷப்பணி மதிப்பு மிக்கதாகும். இவருடைய மரணம் கர்த்தருடைய சபைக்கு ஒரு பெரிய இழப்பாக இருந்தபோதிலும், இவருடைய இலக்கியப் பணி இன்றும் உயிருள்ளதாயிருக்கிறது.

நாங்கள் 1983-ல் இவருடைய ஊழியத்தைக் குறித்து கேள்விப்பட்டோம். அதன் பின் தேவ கிருபையால் 1996-ம் ஆண்டில் சகோதரர் பி.ஆர்.சாமி அவர்களின் மூலம் சகோதரர் ஜே.சி.சோட் அவர்களையும் அவர்களது துணைவியார் சகோதரி பெட்டி சோட் அவர்களையும் சந்திக்கும்படியான ஒரு தருணத்தை பெற்றோம். அது முதல் ஜே.சி. யுடன் இணைந்து இலக்கியம், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊழியங்களை செய்துவருகிறோம். இவைகளின் மூலம் நாங்கள் இந்தியாவில் அநேக ஆத்துமாக்களை ஆதாயம் செய்து வருகிறோம்.

சகோதரர் ஜே.சி அவர்களுடைய அன்பு மனைவி பெட்டிக்காகவும், அவருடைய குடும்பத்தாருக்காகவும் மற்றும் உலக சுவிசேஷ அமைப்பில் பணிபுரிந்து வரும் சகோதர, சகோதரிகளுக்காகவும் ஜெபிக்கும்படி கர்த்தருடைய சபையாரை வேண்டிக்கொள்கிறோம்.

J.C Choate, who was an eminent missionary had been working for several years throughout the world. He entered the promised rest on Feb 1st at 12.20 P.M. Especially his evangelical work in India is estimable. Though his death is a very big loss to the Lord's Church, his literature ministry is still alive.

In 1983 we heared about his ministry in India. And then we got an opportunity by God's grace to meet brother J.C.Choate and his wife sister Betty on 1996 through brother P.R.Swamy. Eversince we join with J.C. and do Literature, TV and Radio ministries. Through these we have been winning a lot of souls in India.

We request the Lord's Churches to pray for brother J.C's beloved wife sister Betty, his family and all brothers and sisters who work in the World Evangelism Foundation.

In the Lord's Ministry,
B.Arjunan & Glory



# கர்த்தர் கைவிடமாட்டார்

- A.Prabhakaran

**பி**ரியமான, சகோதரர்களே, சகோதரிகளே இன்றைய நாட்களில் கர்த்தர் மேல் நம்பிக்கை வைக்காமல் மாயையான உலகத்தில் வாழும் மனிதர்கள் மேல் நம்பிக்கை வைத்து அவர்களால் கைவிடப்பட்டு சோர்ந்து போனவர்கள் ஏராளமானோர். உயிராய் நேசித்த நண்பர்கள், சொந்த இனத்தார்கள் இப்படி பல... இதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய அறியாமை என்றே சொல்ல வேண்டும். நாம் மனிதர்களின் மேல் வைத்துள்ள நம்பிக்கை நம்மை ஒரு நாளும் காப்பாற்றாது. அவர்கள் விரும்பும் காரியத்தை நாம் செய்யாமல் போனால் நம்மை நேசிக்கும் அதே மனிதர்கள் நம்மை வெறுப்பதையும் பார்க்கிறோம். சங்கீதக்காரன் தாவீது இப்படிச் சொல்லுகிறான் "கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை; ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்" (சங்.9:10). இது எவ்வளவு ஆறுதலான வார்த்தை. ஆம்! நமக்கு ஆபத்து என்று வந்தவுடன் நாம் மனிதர்களை நாடி ஓடாமல், நமக்கு உதவ வல்ல தேவனை தேடினால், நிச்சயம் நம்மை கைவிடாமல் காக்க இயேசுகிறிஸ்து நன்மைகளை செயவார் அல்லது அதிலிருந்து தப்பிக்கும்படியான போக்கை ஏற்படுத்துவார்.

**கர்த்தரை விசுவாசத்தோடு தேட வேண்டும்:**

இந்த விசுவாசம் நமது இருதயத்திலிருந்து வருகிற ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை. இது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபி.11:1). ஆம், நாம் விசுவாசத்தோடு தேவனை தேடி வரவேண்டும், விசுவாசத்தோடு முழங்கால்படியிட்டு ஜெபிக்கவேண்டும். இயேசுவே வழி என்று விசுவாசத்தோடு நீங்கள் ஜெபித்தால் நீங்கள் கேட்பதைப் பெற்றுக்கொள்வீர்கள். ஏனெனில் "நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்" (மத்.21:22). ஆகவே, விச்வாசத்தோடு தேவனை தேடிவாருங்கள், அவர் ஒரு நாளும் கைவிட மாட்டார். நம்மை விட்டு விலகவும் மாட்டார். "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்கிறார் (யோவா.14:14).

**கர்த்தர், ஆபத்திலிருந்து விடுதலை செய்கிறவர்:**

யூதா என்ற தேசத்தில் யோசபாத் என்ற ஒரு ராஜா இருந்தான். அவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, தேவனடைய வழிகளில் உண்மையாய் நடந்து, தேவனுக்குப் பிரியமானவனாய் வாழ்ந்து வந்தான். யுத்தம் செய்வதில் பெரிய வீரன். மற்ற ராஜாக்கள் இவனுடைய பராக்கிரமத்தை

அறிந்திருந்தார்கள் (2நாளா.20:1,2). இந்த யோசபாத்தோடு யுத்தம் செய்ய மோவாப், அம்மோன் மற்றும் சீரிய ராஜாக்கள் எழும்பி வந்தார்கள். இதையறிந்த யோசபாத், தன் படையை பலப்படுத்துவதைப் பற்றி சிந்தியாமல், தேவனுக்கு பயந்தவனாய் இருந்தபடியால் தன் தேசத்தாருடன் உபவாசம் செய்து தேவனை தேடினான். அவர்களோடு பேசி, "கர்த்தர் உங்களுடனே இருக்கிறார், பயப்பட வேண்டாம்" என்றான். யோசபாத், தன் படைக்கு முன்பாக பாடகர் குழுவினரை தேவனை துதிக்கும்படி அனுப்பி, இரண்டாவதாக, தன் யுத்த வீரர்களை அனுப்பினான். அங்கே என்ன நடந்தது தெரியுமா? எதிராளிகள் அவர்களுக்குள்ளேயே சண்டையிட்டு மரித்துக்கிடந்தார்கள். எதிராளிகளுடன் யோசபாத்தும், அவன் சேனையும் யுத்தம் செய்யாமலேயே தேவன் அவர்களுக்கு ஜெயத்தை தந்தார்.


"ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்" என்ற சங்.50:15-ன்படி யோசபாத் ஆபத்து காலத்தில் தன் படையையோ, தன் மக்களையோ நம்பாமல் தேவனாகிய கர்த்தரையே நம்பினபடியால் அவனுக்குச் ஜெயத்தை கொடுத்தார். இதே போல நம் வாழ்விலும் பல விதமான ஆபத்துக்கள், சோதனைகள். எங்களால் எதுவுமே செய்ய முடியாது என்று சொல்லுகிற அளவு பிரச்சனைகள் இருக்கலாம். இதிலிருந்து விடுபடவே வழியில்லை என்று திகைத்து நிற்கலாம். யோசபாத்தைப் போல நீங்களும் உங்கள் வாழ்வில் தேவனையே உங்கள் நம்பிக்கையாகக் கொண்டு, அவர் சித்தம் உங்கள் வாழ்வில் நிறைவேற முற்றுமாய் அவர் கரங்களில் ஒப்புக்கொடுத்து, அவர் சொல்வதை மட்டும் செய்கிறவர்களாய் இருந்தால் கர்த்தர் நிச்சயம் உங்கள் வாழ்வில் ஜெயத்தை தந்து உங்களை ஆயிரம் தலைமுறையாய் ஆசீர்வதித்து செழிக்கப்பண்ணுவார். கர்த்தர் உங்களைக் கைவிடமாட்டார். ஆமென்.

## தோமாவின் சுவிசேஷம்


கி.பி.1945-ல் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் எகிப்தின் நதிக்கரைப் பகுதிகளில் ஆராய்ந்து கொண்டிருந்தபோது, அங்கே தோமாவினால் எழுதப்பட்ட சுவிசேஷம் கிடைக்கப்பெற்றது. தோமா இந்தியாவில் மட்டுமல்ல, எகிப்திலும், சீனாவிலும் சுவிசேஷப்பணி ஆற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. அவ்வாறு எகிப்தில் சுவிசேஷப்பணி செய்தபோது தோமா காப்டிக் மொழியில் சுவிசேஷத்தை எழுதினார். காப்டிக் என்பது எகிப்தில் வாழ்ந்த ஆதிக் கிறிஸ்தவர்கள் பேசிய மொழி. பார்வோன் காலத்தில் பேசப்பட்ட பண்டைய எகிப்திய மொழியை கிரேக்க எழுத்துக்களில் எழுதுவதற்கு காப்டிக் என்று பெயர். தோமாவின் சுவிசேஷத்தில் இயேசுவின் வரலாற்றுடன் இன்னும் சில அற்புதங்களும், இயேசுவின் பிரசங்கங்களில் அதிகப்படியாக 114 வசனங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரியலூர் மாவட்டம் 29வது வாசர் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள்

JANUARY 2008



ஒரு சந்ததி அவரைச்சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும் - சங்.22:30



**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.தொடர்புக்கு : 94435 58041**

**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" யோவான்12:26.**

## நடப்புச்செய்திகள்

- ☆ நாடு முழுவதும் ரூ.65 ஆயிரம் கோடி விவசாய கடனை தள்ளுபடி செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- ☆ கர்நாடக மாநில சுற்றுலா கழகத்துக்காக ரூ.50 கோடியில் 'தங்க ரதம்' ரயில் விடப்பட்டுள்ளது.
- ☆ தமிழகம் மற்றும் புதுச்சேரி மண்டலத்தில் 247 தலைமைதபால் அலுவலகங்களில் ஏர் டெக்கான் விமானடிக்கெட்டுகள் விரைவில் விற்பனை செய்யப்பட உள்ளன.
- ☆ 10–ம் வருப்பு தமிழ்வழி கல்வியில் அதிக மதிப்பெண்பெறும் 1000 மாணவ மாணவியர்களை ஊக்கப்படுத்த பரிசாக கம்யூட்டர்களை அரசு வழங்க உள்ளது.
- ☆ அமெரிக்க – இந்திய வர்த்தக குழுவின் தலைவராக பெப்சி நிறுவனத் தலைவரும் இந்தியருமான இந்திரா நூயி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சரித்திர ஆய்வு

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -6

## கிறிஸ்துவின் பிறப்பிற்கு பிறகு நடக்கவிருந்த தொடர் நிகழ்வுகள்...

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 9841017621



கிறிஸ்து பிறப்பிற்கு 4000 ஆண்டுகளுக்கு முன்பே அவரின் பிறப்பு எத்தன்மையுள்ளதாக விருக்கும் என்பதை: (1) அவர் ஸ்திரீயின் வித்தாக கன்னியின் மைந்தனாக, தேவகுமாரனாக, ஆபிரகாமின் வித்தாக, ஈசாக்கின் குமாரனாக, யாக்கோபின் குமாரனாக, யூத கோத்திரத்தாராக, ஈசாவின் துளிராக (ஏசா.11:1, லூக்.3:23; 32 மத்.1:6) தாவீதின் சந்ததியிலிருந்து (எரே.23:5) பெத்லகேமில் (மீகா.5:2; மத்.2:4) பிறப்பாரென்றும், அவருக்கு காணிக்கை (சங்.72:10; ஏசா.60:6; மத்.2:11) கொண்டுவருவார்கள் என்ற எல்லா தீர்க்கதரிசனங்கள் அவரின் பிறப்பிற்கு கி.மு.4000- ஆண்டுகள் முதல் கி.மு.500 ஆண்டுகளில் கூறியவை நிறைவேறியதை இதற்கு முன்பு ஆய்ந்தறிந்தோம்!

☆ பாலகன் இயேசுவின் பிறப்பின் நற்செய்தியை கிழக்கிலிருந்து சென்ற சாஸ்திரிகள் வாயிலாக கேட்ட கொலைகாரன், மன்னன் ஏரோது (தன் மனைவி, மாமியார், சொந்த மூன்று மகன்கள் எண்ணற்றவர்களை கொலை செய்தவன்) "ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது (எரே.31:15; ஏரோதின் வஞ்சக சதி திட்டத்தை முறியடிக்க தேவ ஆலோசனையின்படி யோசேப்பு, மரியாள், இயேசு பாலனும் எகிப்திற்கு தப்பிச்சென்று, ஏரோது இறந்த செய்தி அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட பிறகு திரும்பவும் வருவார் என்பதை எரே.31:17. "ஏரோது.... பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலை செய்தான்" என்பதை மத்.2:16-18 அறிகிறோம். யோசேப்பு எழுந்து பிள்ளையையும், மரியாளையும் கூட்டிக்கொண்டு இஸ்ரயேல் (இஸ்ரவேல் அல்ல) தேசத்துக்கு வந்தான்" மத்.2:21. எரேமியா30:26-33:26 வரையிலுள்ள நான்கு அதிகாரங்கள் வரப்போகிற மேசியா அளிக்கும் இரட்சிப்பு, அவர் நிலை நிறுத்தப்போகிற தாவீதின் இராஜ்யத்தில் புதிய உடன்படிக்கை 31:31-34 முன்னறிவிக்கப்பட்டது. மத்.25:26-28 நிறைவேறியது

☆ "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும் இஸ்ரயேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா5:2) என்றும் "அவர் எல்லாவற்றிக்கும் முந்தினவர்" கொலோ1:17 மற்றும் யோவான்17:5,24; வெளி.1:1; 2,17; 2:8; 8:58; 22:13.

"நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே, என்னைத் தவிரத்தேவன் இல்லையென்று இஸ்ரயேலின் ராஜாவாகிய கர்த்தரும் சேனைகளின் கர்த்தராகிய அவருடைய மீட்பரும் சொல்லுகிறார்" *ஏசா.44:6*

☆ அவர் கர்த்தர் "கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும், நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்றார்" *சங்.110:1;* இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார் அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம் பண்ணி பூமியிலே நியாயத்தையும், நீதியையும் நடப்பிப்பார்" *எரே.23:5.*

*நிறைவேறுதல்:* "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" *லூக்.2:11; மத்.22:43-45.*

☆ *தீர்க்கதரிசனம்:* ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார் இதோ, (எபிரெய மொழியிலும் IDHOU - இதோ தான்!) ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு இம்மானுயேல் என்று பேரிடுவாள்" *ஏசா.7:14.* *நிறைவேறுதல்* இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு இம்மானுயேல் என்று பெயரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுயேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். *மத்.1:23* (இம்மானுவேல் என்றால் நம்மோடிருக்கிறவேல்) எனவே நாம் "வேலை" நீக்கி "யேல்" (தேவனை) வைத்துக்கொள்வோம்! எழுதுவோம்!! கூறுவோம்!!!

**வேத அறிவுப் போட்டி எண் 69-ல் வெற்றிபெற்றவர்கள்**

| | |
|---|---|
| R. அருண்குமார் | -பிடாரியூர் |
| P. அலிஸ்மேரியம்மாள் | -வதிலை |
| IRA. எதிராசன் | -சங்கரி |
| K. தானியேல் | -குடியாத்தம் |
| M.புகழரசு | -குடியாத்தம் |
| R.ரவிரத்தினராஜ் | -குடியாத்தம் |
| S. தண்டபாணி | -சிலுவத்தூர் |
| Mrs. மரகதம் திரவியம் | -கோம்பை |
| S.R. பெரியசாமி | -சேலூர் |
| Mrs. மெல்ஸிடா | -திண்டுக்கல் |
| G.பூங்கோதை | -வெ. பாளையம் |
| S.சசிகுமார் | -ஊர்எழுதவில்லை |
| J.நிர்மலாஜான் | -மதுரை |
| V.கோவலன் | -மதுரை |

**வேத அறிவுப் போட்டி எண் 69-ன் விடைகள்**

| | |
|---|---|
| 1.நோவா | -ஆதி.6:9 |
| 2.பவுல் | -பிலி.4:11 |
| 3.மோசே | -யாத்.32:13 |
| 4.கசந்து | -கொலோ.3:13 |
| 5.பத்தாயிரம் இஸ்ரவேலருக்கு | -லேவி.26:8 |
| 6.பவுல் | -1தெச.2:6 |
| 7.மோசே | -எண்.11:2 |
| 8.தெசலோனிக்கே | -2தெச.3:8 |
| 9.எமோரியர் | -உபா.1:44 |
| 10.நிலைத்திருப்பாள் | -1தீமோ.5:5 |

**அதி வேகம் ஆபத்து! மித வேகம் மிக நன்று!!**

சிறுவர் பகுதி

# எட்டு வயதில் ராஜாவான யோசியா

*வேதபகுதி: 2 நாளாகமம்34:1-35:27*



**த**ம்பிகளா நீங்க எட்டு மாதத்திலே எட்டு வச்சிருப்பீங்க. எட்டு வயதிலே 80 வயது நிறைந்தவர் களுடைய வார்த்தையையும் புறம்பே தள்ளுவீங்க அப்படித்தானே? ஆனா! யோசியா ராஜா அப்படியல்ல எட்டு வயதில் ராஜாவாகி கர்த்தருடைய பார்வையில் செம்மையாக ஆட்சி செய்தான். ஆனா, கடைசி நாட்களில் தேவ வார்த்தைக்கு செவி கொடாமல் போய்விட்டான்.

அவன் தன் ராஜ்யபாரத்தின் எட்டாம் வருஷத்திலே தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத்தேட ஆரம்பித்தான் அப்பொழுது அவனுக்கு வயது 16 இருக்கும். பிரசங்கி சொல்வது போல வாலிப பிராயத்திலே தன் சிருஷ்டிகரை நினைக்க ஆரம்பித்தான். பன்னிரண்டாம் வருஷத்தில் சகல விக்கிரகங்களையும் அழித்துப் போட்டான். இப்படியே அவன் வயது அதிகரிக்க அதிகரிக்க தன் ராஜ்யத்தை சிறப்பாக கொண்டு சென்றான். தன் ராஜ்யத்தின் பதினெட்டாம் வருஷத்தில் தன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தைப் பழுது பார்க்கும்படி ஆட்களை நியமித்தான். ஆலயத்திலே கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கைப் புஸ்தகத்தின் வார்த்தைகளை யெல்லாம் வாசித்து கர்த்தரைப் பின்பற்றி நடப்பேன் என்றும், தன் முழுஇருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் அவருடைய கற்பனை களையும், அவருடைய சாட்சிகளையும், அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளுவேன் என்றும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கை பண்ணினான். அதேபோல பஸ்கா பண்டிகையை நல்ல விதமாக அனுசரித்தான். இதைக்குறித்து நாம் பரிசுத்த வேதாகமத்தில் படிக்கும் போது "தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் நாள் தொடங்கி, இஸ்ரயேலிலே இப்படிப்பட்ட பஸ்கா ஆசரிக்கப்படவில்லை என்று படிக்கிறோம்" இப்படியெல்லாம் சிறப்பாக ஆட்சி செய்த ராஜா என்னவானான் தெரியுமா?

கடைசி நாட்களில் நேகோ என்ற எகிப்தின் ராஜா சொன்ன தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடாமல் அவனோடு யுத்தம் செய்ய புறப்பட்டு வில்வீரர்களால் அம்பெய்து மரணமடைந்தான். இந்த யோசியா ராஜாவைப்போல நீங்களும் சிறு பிராயத்தில் வேதாகமத்தில் சொல்லப்பட்ட முற்பிதாக்களின் நல் வழியை தெரிந்துகொண்டு சபையை கட்டுவதற்கு ஒத்துழைப்பாக இருக்கவேண்டும். யோசியா ராஜா பஸ்கா பண்டிகையை சிறப்பாக அனுசரித்ததுபோல நீங்களும் வாரந்தோறும் சபைக்குச் சென்று வயது வரும் போது திருமுழுக்குக்கு பின்பு கர்த்தருடைய பந்தியை சிறப்பாக அனுசரிக்கவேண்டும். ஆனால் ஒன்று எட்டு வயது முதல் சிறப்பாக ஆட்சி செய்து கர்த்தருக்குப் பிரியமாக வாழ்ந்து கடைசி நாட்களில் தேவ வார்த்தைக்கு செவி கொடாமல் போன இந்த யோசியாவைப்போல நீங்களும் போய்விடக்கூடாது.

**மனப்பாட வசனம்:** "ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும் சம்பாதி; என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு" நீதிமொழிகள்4:5

# வேத அறிவுப் போட்டி
## எண்.90

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

**கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ந்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.**

1. கர்த்தர் எகிப்தின் நிந்தையை இஸ்ரவேல்மேல் இராதபடிக்கு புரட்டிப்போட்டபடியால் அந்த ஸ்தலம் என்னவென்று அழைக்கப்பட்டது?
2. உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள் என்று யாருக்கு யார் எழுதுவது?
3. உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ என்று யாரைப்பார்த்து கர்த்தர் சொல்லுகிறார்?
4. தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைபண்ணுகிறார்கள், கிரியைகளினாலே அவரை என்னசெய்கிறார்கள்?
5. தன் இரண்டு மருமக்களோடுங்கூடத்தானிருந்த ஸ்தலத்தை விட்டு யூதா தேசத்திற்குத் திரும்பிப்போக புறப்பட்டவள் யார்?
6. முன்னே அவன் உமக்குப் பிரயோஜனமில்லாதவன், இப்பொழுதோ உமக்கும் எனக்கும் பிரயோஜனமுள்ளவன் என்று பவுல் யாரைக் குறித்து எழுதுகிறார்?
7. ஒடுக்கப்பட்டவர்கள், கடன்பட்டவர்கள், முறுமுறுக்கிறவர்கள் யாவரும் எவனோடே கூடிக்கொண்டார்கள்? அவன் அவர்களுக்கு என்னவானான்?
8. மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே செத்தார்கள் என்று எந்த புத்தகத்தில் வாசிக்கிறோம்?
9. ராஜாவாகிய என் ஆண்டவன் எங்கேயிருப்பாரோ, அங்கே உமது அடியானும், செத்தாலும் பிழைத்தாலும், இருப்பான் என்று தாவீதைப் பார்த்து சொன்னவன் யார்?
10. நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே, அவரே இரட்சிக்கவும் அதை என்னசெய்யவும், வல்லவர்?

*"கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல"*
*(லூக்கா 9:62)*

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan Nagar, Batagundu - 624 202 and printed by R. Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlgundu - 624 202.
Editor : B. Arjunan.



**ஆராதனை நேரம்** ஞாயிறு காலை 8.30 மணி
தேவனை ஆவியோடும்,உண்மையோடும்,
தொழுது கொள்ள யாவரையும் அன்புடன்அழைக்கிறோம்.

**BATLAGUNDU CHURCH OF CHRIST**
**MEETS HERE**
17-2-102 D/5, Rajan Nagar, BATLAGUNDU - 624 202. Dindigul DIST.



**உங்கள் வானொலியில்**
இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள்
மேலும்

**உங்கள் தொலைக்காட்சியில்**
Sri - Every Sunday 6.15 a.m.
Tamilan - Every Monday 6.00 a.m.
Imayam - Every Thursday 6.15 a.m.

**மாத இதழ் மற்றும் வேதபாடம்**
தேவைக்கு உடனே ரூ.15/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

**Radio & TV** யில் வெளி வந்த
தேவ செய்திகள் அடங்கிய CD & DVD க்கள்
விற்பனைக்கு உள்ளது. தேவைப்படுவோர் ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

**சகலத் தொடர்புக்கும்**

R.N.I. No. TNTAM/2000/3529 Postal Registration. No. TN/SR-164/2006-2008
Lincensed to Post Without Pre-Payment License No. TN/WPP-25/SR 2006-2008 Posted at Batlagundu Post Office on 10th February 2008.

**Monthly Magazine**

To

From

*Editor*
*THE WORD OF CHRIST*
*P.O.Box No. 5,*
*Batlagundu - 624 202*
*S.India.*